சொல்லியிருக்கிறார்கள். சட்டவிதிகளுக்கு புறம்பானது என்பது பற்றிய பிரச்னையை நான் ஏற்கெனவே எழுப்பியபோது சபாநாயகர் அவர்கள் எழுதிக்கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள், நான் எழுதியும் கொடுத்திருக்கிறேன், அதைப்பற்றி தீர்ப்பைத் தாங்களே வழங்கப்போகிறீர்களா அல்லது அந்தத் தீர்ப்பு எப்போது வழங்கப்படும்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைத் தலைவர் அவர்கள் வந்ததற்குப் பின்னாலே அது எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) பேரவைத் தலைவர் அவைக்கு வருகை தராதது குறித்து.

திரு. துரை முருகன் : துணைத் தலைவர் அவர்களே, ஆன் ஏ பாயின்ட் ஆப் ஆர்டர், இன்றைக்கு இங்கே சட்டமன்றத் துறை மானியம் வருகிறது. ஆகவே இது ஒரு முக்கியமான நாள். சபாநாயகர் அவர்கள் இரண்டு தினங்களாக இங்கே வரவில்லை. என்ன காரணம்? அவருக்கு வேறு எங்கேயும் நிகழ்ச்சியா? அல்லது உடல் நலம் குன்றியிருக்கிறதா? அல்லது ஏதாவது நிகழ்ச்சி இருக்கிறதா? அவைத் தலைவர் அவர்கள் வருவார்களா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைத் தலைவர் அவர்கள் உடல் நலம் சரியில்லாததால் கலந்து கொள்ளவில்லை. நாளைக்கு வருவார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான் : உடல் நலமா அல்லது மன நலமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உடல் நலம் என்று ஏற்கனவே நான் சொல்லி விட்டேன். ஏன் உங்களுக்கு மனநலம் சரியில்லையா?

திரு. எஸ். ஆர். இராதா: மன நலம் என்று சொல்கிறார்களே.